[26th August 1961

கூட வந்திருந்த அம்மாளுக்கு காப்பி சாப்பிட வேண்டும் போல் இருந்தாற் போல் இருக்கிறது, அவர்கள் ஹோட்டலுக்குப் போனார்கள். இந்த அம்மாளும் கூடவே போனார்கள். காப்பி சாப்பிட்ட இடத்தில் ஆஸ்பத்திரி சீட்டை விட்டு விட்டார்களோ என்னவோ, திரும்பி வந்தபோது கேட்டில் அவர்களை விடவில்லை. அட்மிஷன் டிக்கட்டை தொலைத்து விட்டதால் அப்படியாகி விட்டது. நல்ல வேளையாக மறுநாள் அவள் புருஷன் அழைத்து வந்து விட்டார் ; அதன் பிறகு நாலு ஐந்து நாட்கள் அங்கேயிருந்து சிகிச்சை பெற்றார்கள்.

SRI S. M. ANNAMALAI : அமைச்சரவர்கள் அந்த அம்மாளின் புருஷன் மறுநாள் அழைத்து வந்ததாகச் சொன்னார்கள். அந்த அம்மாள் ஆஸ்பத்திரியை விட்டுப் போனதாக பத்திரிகைகளில் வந்ததன்பிறகு, போலீஸ் கொண்டுவந்ததாகச் சொல்லப்பட்டதே. அந்த அம்மாளுக்கு என்ன நோய் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கத்திக் குத்துக் காயத்திற்காக வந்தார்கள். போலீஸ் ஒன்றும் இல்லை இதிலே........இதிலே ஒரு திருத்தம் செய்ய வேண்டிருக்கிறது. I am sorry, புருஷன் ஏற்படுத்திய கத்திக் குத்திற்காக வந்தாள் ; மறுநாள் அழைத்து வந்தது, தகப்பனார். (சிரிப்பு).

SRI S. M. ANNAMALAI : கத்திக் குத்துக் காயம் என்றால், மெமோ போட்டு, டாக்டர்கள் போலீசுக்கு தெரியப்படுத்தினார்களா ? அப்படிப் போலீசில் இருந்தால், போலீஸ் காவலில் இருந்து தப்பினது எவ்விதம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : போலீசு உத்தரவு போட்டுச் செய்வதற்குள்ளாகவே, நல்ல வேளையாக மறுநாளே அந்த அம்மாள் அங்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, if a patient is brought to the hospital for treatment due to some injuries caused to her, are there not any strict measures to supervise or control the presence of the patient in the hospital till actually treatment is given? How does it happen that she could go away without anybody noticing or preventing her from going out?

THE HON. SRI M. A. MANICKAVELU : The bearer led the patient and after in forming the nurse-in-charge of the theatre, she went out, தாகம் எடுக்கிறது, காபி குடிக்கப் போகிறேன் என்றதால், விட்டு இருக்கிறார்கள். அவர்களிடம் அந்த அட்மிஷன் டிக்கட் இல்லாத காரணத்தினால், வந்த விபரீதம் இது. டிக்கட்டு இருந்திருந்தால் ஒன்றுமேயில்லை.

SRI V. S. MANIKKASUNDARAM : அந்த சம்பவம் குறித்து கிரிமினல் கேஸ் ஏதாவது ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அது விஷயமாக தகவல் இல்லை.

Accident in moving bus

*1422 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it was a fact that a woman and child were thrown out of a moving bus in Madras City on 9th February 1961 because of a sudden jolt of the vehicle;

26th August 1961]

(*b*) if so, the steps taken to avoid such accidents in future; and

(*c*) whether any compensation was given to the woman?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) It was a fact that a woman and child were thrown out of a moving bus on 9th February 1961. But this was not because of a sudden jolt of the vehicle as alleged but due to application of brake to a avert a serious accident, as otherwise a cyclist would have been crushed to death.

(*b*) Application of sudden brake is not done wantonly by any driver. Incidents of the nature in question cannot directly be attributed to the negligence or rash driving of the driver. There are, however, general instructions to all drivers not to drive in a rash or negligent manner.

(*c*) No claim for compensation has so far been received from the passenger.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த மாதிரி ஆபத்துக்கள், சாதாரணமாக பஸ்ஸுகளில், கதவுகள் இல்லாத காரணத்தால் ஏற்படுகின்றனவே, ஆகவே, கதவுகள் இட ஏதாவது திட்டம் உண்டா ? அப்படிச் செய்யச் சர்க்காருக்கு ஏதாவது உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மாதிரி அதிகமாக ஆக்ஸிடெண்டுகள் வந்ததாக எனக்குக் கணக்கு இல்லை. ரொம்ப அதிகமாக வருகிறதானால், அதற்கான பாதுகாப்பு எடுக்கலாம். இது ரேராக எப்பவோ ஒரு சமயம் நடக்கும் சம்பவம்.

SRI S. M. ANNAMALAI : காம்பன்சேஷன் சம்பந்தமாக அப்ளிகேஷன் வரவில்லை என்று சொன்னார்கள். அப்ளிகேஷன் வந்தால், பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் சர்க்காருடைய கடமை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that even 9-00
now, the buses arebrought to a stop suddenly and even with a a.m.
jolt, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : This is too general a question for any answer, Sir.

Sales tax (exemption for potatoes)

*1423 *Q.*—SRI V. SUBBIAH : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி உருளைக்கிழங்கு வியாபாரிகள் சங்கத்திடமிருந்து உருளைக் கிழங்கின் மேல் உள்ள விற்பனை வரியை விலக்கக்கோரி அரசாங்கத்திற்கு மனு வந்ததா ?

(இ) அதன்பேரில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No petition has been received recently. Potato is exempt from sales tax even from 1st April 1960.

(இ) Does not arise.